Registered with the Registrar
of Newspapers for India
under No. 10410

Registered No. PY/44/2021-23

सत्यमेव जयते

# புதுச்சேரி மாநில அரசிதழ்

# La Gazette de L' État de Poudouchéry

# The Gazette of Puducherry

**PART - I**

| சிறப்பு வெளியீடு | EXTRAORDINAIRE | EXTRAORDINARY |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற வெளியீடு | Publiée par Autorité | Published by Authority |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எண் | | புதுச்சேரி | வியாழக்கிழமை | 2021 ஆம் | பிப்ரவரி மீ | 25 ம |
| No. | 27 | Poudouchéry | Jeudi | 25 | Février | 2021 (6 Phalguna 1942) |
| No. | | Puducherry | Thursday | 25th | February | 2021 |


**புதுச்சேரி அரசு**

**உள்ளாட்சித்துறைச் செயலகம்**

*அரசாணை எண் 05/உ.ஆ.செ./2021,*

*புதுச்சேரி, நாள் 19-02-2021.*

**அறிவிக்கை**

கொம்யூன் பஞ்சாயத்து மன்றங்கள் மற்றும் கிராமப்பஞ்சாயத்து மன்றங்களுக்கு தேர்தல் நடத்தும் நோக்கத்திற்காக அவற்றின் எல்லைகளை மறுவரையறை செய்வதற்காக புதுச்சேரி அரசு, உள்ளாட்சித்துறைச் செயலகத்தால் 2019-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 7-ஆம் தேதியிட்ட அரசாணை எண் 50-ல், ஓர் அறிவிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதால்;

மேலும், மேற்கூறப்பட்ட அரசாணையில், புதுச்சேரி, வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட வில்லியனூர் (கிழக்கு) கிராமப்பஞ்சாயத்து மன்ற தொகுதிகளின் மறுவரையறையைக் காட்டும் விவர அறிக்கையான பின்னிணைப்பு எண் II-ல் ,பஞ்சாயத்து மன்றத் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகள்/வீதிகளின் பட்டியல் பொறுத்தமட்டிலான மேற்சொன்ன பின்னிணைப்பு எண் II-இன் (5)-ஆம் கலப்பத்தியில் பிழை ஏற்பட்டுள்ளது என்பதால்;

எனவே, தற்போது புதுச்சேரி, வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட வில்லியனூர் (கிழக்கு) கிராமப்பஞ்சாயத்து மன்றம் பொறுத்தமட்டில் கிராமப்பஞ்சாயத்து மன்றத் தொகுதிகளின் மறுவரையறையைக் காட்டும் விவர அறிக்கையான மேற்சொன்ன பின்னிணைப்பு எண் II-ஐத் திருத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதாவது;-

"(1)-ஆம் கலப்பத்தியின் கீழ் தற்போதுள்ள பதிவுகள் மற்றும் (5)-ஆம் கலப்பத்திக்கெதிராக அதற்கு நேரிணையாக உள்ள பதிவுகளுக்கு மாற்றாகப் பின்வரும் பதிவுகள் பொருத்தப்பட வேண்டும்", அதாவது;-

| கிராமப் பஞ்சாயத்தின் தொகுதி எண் | தொகுதியில் அடங்கியுள்ள பகுதிகள்/ வீதிகளின் பட்டியல் |
|---|---|
| (1) | (2) |
| 1 | பாண்டி-விழுப்புரம் பிரதான சாலை (மேற்குப்பக்கம்), வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்துப் பணியாளர்களுக்கான குடியிருப்பு வீதி, அனந்தம்மாள் சத்திரம் 1-ஆம், 2-ஆம் குறுக்கு வீதி. |
| 2 | விழுப்புரம் பிரதான சாலை (கிழக்குப்பக்கம்), வசந்தா நகர், 1-ஆம், 2-ஆம், 3-ஆம், 4-ஆம் மற்றும் 5-ஆம் குறுக்கு வீதிகள், வ.உ.சி பிரதான வீதி, (1-ஆம், 2-ஆம், 3-ஆம், 4-ஆம் குறுக்கு வீதிகள்), பாரதியார் பிரதான வீதி, (1-ஆம், 2-ஆம், 3-ஆம், 4-ஆம், 5-ஆம் குறுக்கு வீதிகள்). |
| 3 | பாண்டி-விழுப்புரம் பிரதான சாலை (கிழக்குப்பக்கம்), காமராஜர் வீதி, நேரு வீதி (வடக்குப்பக்கம்), திருக்காமேஷ்வர் 1-ஆம் கிழக்கு குறுக்கு வீதி (வடக்குப்பக்கம்). |
| 4 | வசந்தா நகர், நேரு வீதி (தெற்குப்பக்கம்), திருக்காமேஷ்வர் நகர் கிழக்கு (தெற்குப்பக்கம்), 1-ஆம் குறுக்கு வீதியின் மேற்குப்பக்கம், 2-ஆம்,3-ஆம், 4-ஆம் குறுக்கு வீதி. |
| 5 | பாண்டி-விழுப்புரம் பிரதான சாலை (கிழக்குப்பக்கம்), வெள்ளாழர் வீதி, மேட்டு வீதி (கிழக்கு மற்றும் மேற்குப் பகுதி). |
| 6 | விழுப்புரம் பிரதான சாலை (கிழக்குப்பக்கம்), கிழக்கு சன்னதி வீதி, ஆரணி வீதி (வடக்குப்பக்கம்). |
| 7 | ஆரணி வீதி (தெற்குப்பக்கம்), வீரவாஞ்சி நகர் முதல் குறுக்கு வீதி (மனோகரி வீதி), 2-ஆம் குறுக்கு வீதி (பைரவி வீதி), பைரவி வீதியின் விரிவு, நீலாம்பரி வீதி, காம்போதி வீதி, பூபாலம் வீதி மற்றும் 3-ஆம் குறுக்கு வீதியின் விரிவு. |
| 8 | தில்லை நகர், வ.உ.சி. வீதி (வடக்குப்பக்கம்), வாய்க்கால் வீதி (மேற்குப்பக்கம்), திரு.வி.க. வீதி, 5-ஆம் மற்றும் 6-ஆம் வீதி. |
| 9 | தில்லை நகர் பிரதான சாலை, வ.உ.சி. வீதி (தெற்குப்பக்கம்), கம்பன் வீதி, வள்ளுவன் வீதி, சுப்பரமணியன் வீதி, அங்காடி வீதி (கிழக்குப்பக்கம்). |

இந்த அறிவிக்கை புதுச்சேரி அரசின் அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் இது குறித்து மறுப்புகள் அல்லது ஆலோசனைகளைப் பொதுமக்கள் புதுச்சேரி அரசின், உள்ளாட்சித்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கோரி அவர்களின் தகவலுக்காக இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. மேற்கூறப்பட்ட காலக்கெடுவிற்குள் பெறப்படும் மறுப்புகள் அல்லது ஆலோசனைகள் அரசால் பரிசீலிக்கப்படும்.

(துணைநிலை ஆளுநரின் ஆணைப்படி)

**கிட்டி பலராம்,**
அரசு சார்புச் செயலர் (உள்ளாட்சித்துறை).

online publication at **"https://styandptg.py.gov.in"**
*Published by* the Director, Government Press, Puducherry.